முன்னிலை : திரு. பா. சரவணன், பி.எஸ்.சி.பி.எல்.,

சார்பு நீதிபதி, பெருந்துறை.

| |
|---|
| OS 108/16 |
| பி.சா.1 ( கண்ணம்மாள்) |
| நாள் 04.02.2020 |

1969ம் ஆண்டின் 54 வது சட்டப் பிரிவு 5(2) ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ( வாதி தரப்பில்)**

எனக்கு 60 வயதாகிறது. நான் பிறப்பதற்கு முன்பு ஏற்பட்ட பத்திரங்களை பொறுத்தோ, யார் யார் எப்படி அனுபவித்தார்கள் என்பது பற்றியோ எனக்கு நேரடியாக தெரியாது. தாவா சொத்துக்கள் எனக்கு மாமனார் வகையில் பாத்தியம். எந்த பத்திரத்தின் அடிப்படையில் என் மாமனாருக்கு பாத்தியம் என்றால் 1919 ம் வருடத்தில் என் மாமனார் விலைக்கு வாங்கிய பத்திரத்தின் அடிப்படையில் பாத்தியம். என் மாமனார் வாங்கிய பத்திரத்தில் சொத்தின் விஸ்தீரணம் 5 ஏக்கர் 28 சென்டாக இருக்கலாம். சரியாக ஞாபகமில்லை. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 9 ஏக்கர் 73 சென்ட் என்றால் எனக்கு ஞாபகமில்லை. சற்று அதிகமாக இருக்கலாம். மொத்த சொத்தில் சரிபாதியை மட்டும் தான் என் மாமனார் வகையறா வாங்கியுள்ளார்கள் என்றால் அளவு சரியாக சொல்ல முடியாது. என் மாமனார் வகையறாவிற்கு பாத்தியமே 4 ஏக்கர் 86 1/2 சென்ட் தான் என்றால் சரியல்ல. 5 ஏக்கர் 28 சென்டாக இருக்கும். 24.11.11 ல் நானும் ஜெயலட்சுமியும் ஒரு பாக பிரிவினை செய்து கொண்டோம். மேற்படி பத்திரத்தில் என் மாமனாருக்கு என்ன விஸ்தீரணம் பாத்தியமோ அதை மட்டுமே எழுதிக் கொண்டோமா என்றால் எனக்கு சேர்த்து எழுதி கொடுத்துள்ளார்கள். என் மாமனாருக்கு பாதியப்பட்ட 4 ஏக்கர் 86 1/2 சென்டிற்கு பதிலாக மேற்படி பாகப்பிரிவினையில் 5.28 ஏக்கர் என விஸ்தீரணம் எந்த ஆவணத்தின் அடிப்படையில் குறிப்பிட்டோம் என்றால் புறம்போக்கு இடம் இருந்தது, அதற்கு பட்டா வாங்கி அதையும் சேர்த்து எழுதிக கொண்டோம். வாதிக்கு பாத்தியப்பட்ட நிலத்தை தான் எங்கள் பாக பத்திரத்தில் சேர்த்து எழுதியுள்ளோம் என்றும், நான் கூறியவாறு அங்கே புறம்போக்கு நிலம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. நான் வாங்கியதாக கூறும் பட்டா எண் ஞாபகமில்லை. எதன் அடிப்படையில் பட்டா வழங்கப்பட்டது என்று நேரடியாக தெரியாது. பட்டா வழங்குமபோது உரிய அறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்று நேரடியாக தெரியாது. அப்போது எனக்கு திருமணமே நடக்கவில்லை. நான் குறிப்பிட்டுள்ள அ வ எண் 31/1976 வழக்கில் நான் தரப்பினர் அல்ல என்றால் சரிதான். மேற்படி வழக்கு பற்றி எனது எதிர்வழக்குரையில் கூறாமல் தற்போது முதல் விசாரணையில் அந்த ஆவணத்தை தாக்கல் செய்தது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. வாதியை ஏமாற்றும் நோக்கத்தோடு வாதிக்கு பாத்தியப்பட்ட நிலத்தை சேர்த்து பாக பத்திரத்தில் குறிப்பிட்டுக் கொண்டு

*அதை அடிப்படையாக வைத்து பொய்யாக கிரய பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஏற்படுத்திக் கொடுத்த கிரய ஆவணங்கள் பெயரளவில் ஏற்பட்டவை என்றும், நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. எது எப்படியிருப்பினும், என் மாமனார் வகையறாவிற்கு 4 ஏக்கர் 86 1/2 சென்ட் மட்டுமே பாத்தியம் என்றும், அதை விட கூடுதலாக ஏற்படுத்திய விஸ்தீரணத்தை பொறுத்து ஏற்பட்டுதிய ஆவணங்கள் செல்லாது என்றால் சரியல்ல. நான் ஏற்படுத்திய ஆவணங்கள் விவரத்தை எனது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லாமல் முதல் விசாரணையில் குறிப்பிட்டள்ளது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.*

Uploaded by
SS